# ஆத்ம ஜோதி



ஆனந்த ஆச்சிரம அன்னை கிருஷ்ணபாய்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| | | |
|---|---|---|
| சோதி 8 | மன்மதஞு கார்த்திகை 1-ந்உ (17-11-55) | சுடர் 1 |


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | ஆனந்தாஸ்ரமத்தாய் | 1 |
| 2 | அருட் சத்தி | 2 |
| 3 | ஓர் புதிய புனித வைபவம் | 3 |
| 4 | கருணைக்கடல் | 5 |
| 5 | தாயோடு அளாவல் | 7 |
| 6 | திருமுறைக் காட்சிகள் | 9 |
| 7 | ஹிந்துராஷ்ட்ரபக்தி | 15 |
| 8 | ஸ்ரீகதிரைமணிமாலை | 20 |
| 9 | சுவாமி சிவானந்தர் வாக்கு | 22 |
| 10 | நானும் எனது குருநாதரும் | 26 |
| 11 | செய்தித் திரட்டு | 29 |
| 12 | ஐயம் தெளிதல் | கவர் மூன்றும் பக்கம் |



## ஆத்ம ஜோதி


ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]



சரஸ்வதி புத்தகசாலை
சாவகச்சேரி


# ஆனந்தாஸ்ரமத்தாய்



ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம்
ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம்
ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம்
ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம்

சுந்தர வதன சுகுண மனோகரி
மந்த ஹாச முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடு வாயுந்தன் தரிசனமே [ஓம்சக்தி]

நந்தி தேவருடன் முனிவரும் பணி
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்த மாயனயனுடன்
வசமாய் உன்புகழ் பாடிடவே [ஓம்சக்தி]

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தநயன் மகிழ்ந்திட
எங்கும் ஆநந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்[ஓம்சக்தி]



வேதங்களுன்னை வேண்டிப் பாடி
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்த மான ஜோதிஸ்வ ரூப
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் [ஓம்சக்தி]

மீன லோசனி மகேஸ்வரி தாயே
தேன்மொழி யுடைய கிருஷ்ணபாய் நீயே
ஆனந்தாஸ்ரம வாசினி தாயே
அன்புடன் எளியார்க்க கருள்புரி வாயே.
[ஓம்சக்தி]

(சாது ஸ்ரீ முருகதாஸர்)

# அருட்சத்தி

—(யோகி சுத்தானந்த பாரதியார்)—

எந்த யோகமார்க்க மானாலும், சித்திக்குமுன் சக்தி வேண்டும் அருட்சக்தி பொருட்சக்தி என்று சக்தி இருவகையாகும். காந்தம், மின்சாரம், ரேடியம், எலெக்ட்ரன் அணுக்களிற் காண்பது பொருட்சக்தி ஆகும். ஆத்ய சித்தி பெற்ற யோகிகளிடமே அருட்சக்தி அல்லது தெய்வ சக்தி வெளிப்படும். அருட்சத்தி பெற்ற மகான்களே குருமார் ஆவார். தற்பரனாகிய ஒப்புயர்வற்ற பரமாத்மன், அருட்சக்தியினாலே தான் ஐந்தொழில் புரிகின்றான். அந்தச்சக்தியை வேதம் பரமாகாசம் என்கிறது. இறைவனின் பராசக்தி ஆகாச வடிவமாயிருக்கிறது.

ஆகாசம் எங்கும் இருக்கிறது; அதனின்றே படிப்படியாகக் காற்று, ஒளி, தீ, நீர், மண், பயிர், உயிர் எல்லாம் போந்து அதற்கே மீளுகின்றன, ஆகாசத்திலுள்ள சக்தி அணுக்களே பலவகையான பூத பௌதிகத் திறமைகளாக உலகில் இறங்கி, அற்புதங்கள் செய்கின்றன. எங்கே மின்பொறி சுழன்றாலும், எங்கே ரேடியோவைத் திருகினாலும், அந்தச் சக்தி இறங்கி வேலை செய்கிறது. அதுபோல் தெய்வ சக்தியும் எங்கும் பரவியிருக்கிறது; ஏனெனில் ஆகாசமாகிய சக்தியே பரமன் உடலாகும்.

ஏற்கத் தயாராயிருக்கும் யந்திரங்களில் மின்சாரம் இறங்குவது போலவே; தன்னை ஆவாஹனம் செய்யும் பரிசுத்தான்மாக்களுள்ளே அருட்சக்தி பாய்கிறது. அமிர்தத்தை வைக்கப் பரிசுத்தமான பாத்திரம் வேண்டும். கண்ட களிம்புப் பாத்திரத்தில் அதை வைக்க முடியாது. "அருளுக்குப் பாத்திரமாவது" என்று நமது பெரியார் சொல்வதன் பொருள் இதுவே. சாதகனுடைய அந்தக்கரணம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். எனது யான் என்னும் அகம்பாவம் துளியிருந்தாலும், பரம சக்தியைத் தடுத்து விடும்.

அச்சமற்ற நேர்மை. மனவிகாரமற்ற சமத்துவம், கரவற்ற உள்ளன்பு இன்சொல் பிறரைக்குத்திப்பேசாது, தன் குறைகளைக்கண்டு திருத்திக்கொள்ளும் அடக்கம், ஒப்புயர்வற்ற இறைவனிடமே அன்புறுதி. வழிகாட்டும் உண்மையான குருவிடம் விசுவாசம், சாதுசங்கம், தியானோபாசனை—ஆகிய சாதனங்கள் மனிதனுக்குச் சித்தசுத்தி தந்து அவனை அருளுக்குப் பாத்திரமாக்கும்.



# ஓர் புதிய, புனித வைபவம்.

—[ஆசிரியர்]—

"ஆத்ம சம்பத்து, மானசீக சம்பத்து இவைகளே ஒரு மனிதனின் வாழ்க்கையையும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கையையும் உய்விக்கின்றன. புராதனத்தையுடைய இந்தியா ஆத்மீக சம்பத்தினாலேயே இன்றும் உயிருடனிருக்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வித ஆதர்சங்களுடன் இந்தியா சம்பந்தமில்லாதிருந்திருந்தால், அது எங்ஙனம் உயிர் வாழ்ந்திருக்கக்கூடும்? இந்தியாவுக்கு விளைந்த பிரமாண்டமான அல்லல்களுக்கும் தாழ்வுக்குமிடையே, இன்றைக்கு இந்தியா தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால் அது நம் ஆத்ம சம்பத்தினாலேயாம்" என்பது இந்தியப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் நீண்டகால உலக சரித்திர ஆராய்ச்சியிற் கண்ட முடிபு. இந்த உண்மையை அவர் அண்மையில் செய்த ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தின்போது பல முறை எடுத்து விளக்கியதைக்கேட்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தோம்.

பாரத நாட்டின். பாரம்பரீக, பரமார்த்திகப் பண்பாடுகளையும் ஞானச்செல்வங்களையுந்தேடித் திரட்டி வைத்தவர்கள் ஆடவர்கள் மாத்திரமல்ல; அத்தொண்டில் ஈடுபட்டுப் புகழ் படைத்த பெண்களும் பலருளர். வாழையடி வாழையாக இந்தியாவில் அண்மையில் தோன்றிய ஸ்திரீ ரத்தினங்களுள், சாரதாமணி தேவியார், ஆனந்தமாயி, கிருஷ்ணபாய் ஆகிய மூவரும் இன்று உலகப்பிரசித்திபெற்றுள்ளார்கள்: பிந்திய இருவரும் இன்னும் நம்முன் உடல் கொண்டுலாவுகின்றனர்; குறித்த மூவருள் அன்னை கிருஷ்ணபாய் ஒருவரையே உலகின் நாலாபக்கங்களிலுமுள்ள கோடிக்கணக்கான ஆத்மப்பசியாளர் நேரிற்காணும் பாக்கியத்தை அடைந்துள்ளார்கள்.

அன்னை கிருஷ்ணபாய் உலக வாழ்வை முற்றிலுந்துறந்து, தமது குருநாதரான சுவாமி இராமதாசர் அவர்களின் திருப்பாதங்களில் பூரண சரணாகதியடைந்தது இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகட்குமுன், கார்த்திகை மாசத்தில் கார்த்திகை நட்சத்திரம் பொருந்திய சுபவேளையிலாகும். அப்புனித நாளை அன்னாரின் சந்நியாசதினமாகக் கொண்டு, அதன் வெள்ளிவிழாவை இந்த ஆண்டில் கொண்டாட வேண்டுமென்ற ஆர்வம் இற்றைக்கு இரண்டு வருஷங்கட்கு முன்னரேயே பக்த கோடிகளின் உள்ளத்தில் உதித்தது: முதலில் அன்னை

அதை ஏற்க மறுத்தனர். அன்பர்களின்வற்புறுத்தலைத் தவிர்க்கமுடியாது உடன்பட்டபொழுது,31-10-55க்குள் ஆனந்தாச் சிரமத்தொடர்பு பூண்ட பக்தர்கள் சேர்ந்து இருபத்தைந்து கோடி நாம லிகித ஜெபயாகம் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையைக் கொடுத்தனர். அன்னையின் அக்கட்டளையை மகிழ்ந்தேற்ற அடியர் குழு இதுவரையில் இருபத்தொன்பது கோடி மந்திரங்களை எழுதிக் குவித்து விட்டது. அவையடங்கிய கொப்பிகளெல்லாம் 29-11-55 நடக்கப்போகும் வெள்ளிவிழாவில் அன்னையின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்படும்.

அன்னை கிருஷ்ணபாய் ஆதார சக்தியாக வீற்றிருக்கும் ஆனந்தாச்சிரமத்தில் மாத்திரமன்றி உலகின் வேறு பல இடங்களிலும்இவ் வெள்ளிவிழா விமரிசையாகக் கொண்டாடப்படுமென அறிகின்றோம். இந்தியாவின் சமய சரித்திரத்தில் இது போன்ற ஓர் விழா இதற்கு முன் நடந்ததேயில்லையெனலாம். எனவே, ஆனந்தாச்சிரமத்திற்கு யாத்திரை செய்து அதில் பங்கெடுக்கவும், பார்த்துரஸிக்கவும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆர்வங்கொண்டிருப்பதில் வியப்பொன்றுமில்லை. அகில இந்தியப்புகழ் படைத்த பாடகர்களான, ஸ்ரீமதி. எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி, ஸ்ரீமதி. மாதுரிபாய் காறே,திரு.டிலிப் குமார்றோய், சுவாமி ஹரிஹரானந்தபாரதி, திரு. கோபாலகிருஷ்ண பாகவதர் சாது முருகதாஸ் முதலாயினோர் மணித்தியாலக்கணக்காய்ப்பாடப்போகின்றார்கள். அதிகாலை நாலரை மணியிலிருந்து இரவு ஒரு மணிவரைக்கும், சதா ஆத்ம சாதனையில் ஈடுபட்டு, அரிய சங்கீர்த்தனத்தைக்கேட்டு ஆனந்தத்தில் திளைப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை தூய அன்னையின் வெள்ளிவிழா அளிக்கப்போகின்றது. இதில் கலந்து கொள்ளும் பாக்கியம் பெறுவோர் உண்மையில் புண்ணியஞ் செய்தவர்களேயாம்! இன்னும் பல்லாண்டு அன்னை பூரண சுகத்துடன் வாழ்ந்து, உலகுக்கு உய்வழி காட்டும் அரும்பணியைத் தொடர்ந்து செய்யுமாறு எல்லாம் வல்ல பராசக்தி திருவருள் பாலிப்பாளாக!

*"எல்லா அறங்களையும் விட்டொழிந்திங் கென்னையே*
*நல்லாய் சரண்புகுக நானுன்னை—அல்லல்தரு*
*பாவங்களின்முற்றும் பற்றறவே வீடுவிப்பேன்*
*மேவுதுயர் எல்லாம் விடு"*

(*கீதை:* xviii —*62*)



# கருணைக்கடல்.

(*பொ. கனகராசா*)

இறைவனை வணங்கும் பொழுது பல மாதிரி அழைக்கின்றோம் ஒவ்வொருவரும் தம் மனோநிலைக்கு உகந்த வண்ணம், பண்பாட்டிற்கு இயைந்த வண்ணம் அழைக்கின்றனர். அன்பின் ஆர்வத்தால் 'அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே, அன்பின் விளைந்த ஆரமுதே' என்றுமணிவாசகப் பெருமான் அழைக்கின்றார். சிலர் அருட்காதல் அளவை மீறியதால், பித்தா, பேயா,' என்றும் அழைக்கின்றனர், அவர்களிடம் அக்மபாவமில்லை. ஆனால் அன்பு சுரக்கின்றது. தம்மை மறந்த நிலையில் சுந்தரர் பெருந்தகை மேற்கூறியவாறு அழைக்கின்றார்.

இன்னும் மணிவாசகப் பெருமான் ஓரிடத்தில் பல இன்னல்களால் இடர்ப்பட்டு நிலைதடுமாறி நிற்கும் நிலையில், "கருணையினால் கலந்தாண்டு கொண்ட கடையவனே-சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே" என்று இறைவனை வேண்டுகின்றார். இறைவனும் பல அருள் வடிவங்களிற் தோன்றி அன்பரை ஆட்கொள்ளும் அவாவுடையவன். அவனது அடியவர்கள் பக்குவ நிலையடைந்ததும், அவர்களை ஆட்கொண்டு அருளுவான். இதனோடு நின்றுவிடாமல் அடியவர்கள் இரந்து வேண்டுவதை ஈயும் வண்ணம் நிறைந்த வள்ளலாகவும் இருக்கின்றான். ஆதலினாற்றான் அப்பர் சுவாமிகளும், "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்று கூறினார். இறைவன் ஆட்கொள்ளும் தன்மையை மணிவாசகர் இன்னோரிடத்தில் அழகாக ஒரு திருவாசகத்தால் விளக்குகின்றார், அதாவது:—

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
    போது நான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன் நான் என்று உன்னை அறிவித்து என்னை
    ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்குஇரும்பின்பாவை
அனைய நான் பாடேன் நின்று ஆடேன் அந்தோ
    அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்
முனைவனே முறையோ நான் ஆனவாறு
    முடிவு அறியேன் முதல் அந்தம் ஆயினானே

இவ்வகையாக ஆட்கொள்ளும் தன்மை இறைவனிடம் இருப்பதைக்காண்கின்றார் ஒருவர். அவர் நன்றாகக்கல்வி கற்றவர், இறைவன் வழிபாட்டில் ஈடுபட்டவர்.

'கற்றதனாலாய பயனென்கொல்—வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்' என்ற தமிழ் மறையாம் திருக்குறளுக்கு இயைபாக வாழ்பவர். அதனால் முதன்முதலாக இறைவனைக் 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே' என்று அழைக்கின்றார். இறைவன் கற்பக தருவின் கனியைப் போன்று இனிமையானதும் எங்கும் நிறைந்ததுமான அருளை அளிப்பவன் கற்பக தருவும் எவராகிலும் விரும்பிவேண்டுவதைக் கொடுக்கும் தன்மையது அதேபோல இறைவனும் வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் தன்மையை உடையவன். அதனாற்றான் அவரும் 'கற்பகக்கனியே' என்று அழைத்தார்.

அடுத்ததாக இறையருளின் இயல்பைக்குறிக்கும் பொழுது "கரையிலாக் கருணைமா கடலே" என்று அருளுகின்றார். பொதுவாகக்கடலானது பரந்த நீர்ப்பரப்பையுடையதாயினும் கரையையுடையதாக அமைந்திருக்கும். ஆனால் இக்கடலோ கரையில்லாததாகஇருக்கின்றதே. கரையற்றதாகக் கருணையிருந்தாலும் அது எந்நாளும் எல்லாருக்கும் இன்பமே விளைவிக்கக் கூடியதாக இருப்பதால் 'மாகடல்' என்ற சிறப்புப் பொருளை அக்கடலுக்கு அமைத்தார். இக்கருணையைப் பற்றிக் குறிக்குங்கால் தாயுமானவர்,

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்று பாடியருளினார்.

ஆதலின் கருணைவள்ளலான இறைவன் பல இன்னல்களால் இடர்ப்படுபவர்களை யாட் கொண்டு அவர்களைப் பரிசுத்தமுடையவர்களாகப் பக்குவப் படுத்தி, தன்னையடைந்து வணங்கும் தோறும் நெஞ்சு நெக்குவிட்டுருகும் தன்மையுடையவராகச் செய்கின்றான், அவர்கள் அவனை வணங்கும் போதெல்லாம் அவர்தம் உள்ளங்களில் அருள் விளக்குகள் ஏற்றியது போலவும், பின்பு அங்கிருந்து ஒளியைப் பரப்பும் அவாவினையுடைய ஒரு நிலை யேற்படுகின்றது. இத்தன்மையைப் பெற்ற பெரியார்களோடு பழகுந் தோறும் நம் அறி



# தாயோடு அளாவல்

II

**கேள்வி;** தாயே ராம் என்பது உனது நாமம். நாமமும் ரூபமும்எப்போதும் தொடர்புடையவை யாதலால் உனது ரூபம் என்ன ?

**விடை:** எனக்கு நாமரூபமில்லை. ராமதாஸ்! நாம ரூபம் அற்றநிலையில் என்னை அனுபவிப்பதற்கு. நாமரூபத்தோடு கூடியதாகவே முதலில் என்னைக் கருதல் வேண்டும்.

**கே:** ஒன்றே நீ, எனினும் இப்பிரபஞ்சம் முழுவதும் பலவித வேறு பாடுகளை உடையதாயிருக்கிறதே, அது கோடிக்கணக்கான ரூபங்களால் ஆக்கப்பட்டிருக்கிறதே தாயே இது எவ்வாறு?

---

*முற்பக்கத்தொடர்ச்சி*

யாமை அகன்று, அறிவு வளர்கின்றது. இதற்கு விளக்கமாக, சிவானந்த சரஸ்வதியென்ற பெரியாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப்பெற்ற சிலர் அவருடைய அருட்பேற்றின் சில அம்சங்களைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் இராமகிருஷ்ண பரமகம்சரோடு பழகிய விவேகானந்தர் பரிபக்குவ நிலையைப் பெற்றுப்பார்முழுவதும் பயனுடைக் கொள்கைகளைப் பரப்பினார்.

இறைவனின் அருட்சித்தியைப் பெற்ற அறிஞர்கள் வாயார வாழ்த்துகின்றனர். இறைவனை வணங்கும் போதெல்லாம், அவனைக் காணும் பொழுதெல்லாம், உள்ளம் குளிருகின்றதாம். அவ்வண்ணம் உள்ளங் குளிரும் போது, நான் 'என்ற' பொய்யுணர்வற்று, கண்களில் நீர் கசியத் தொடங்கியதும், கண்கள்குளிர்ச்சியடைகின்றனவாம். இவற்றைச் சேந்தனார் தாம் இயற்றிய திருவிசைப்பா ஒன்றினால் விளக்கமாக எடுத்துரைக்கின்றார். அத்திருவிசைப்பா பின்வருமாறு:—

*கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்*
*கரையிலாக் கருணைமாகடலை*
*மற்றவர் அறியா மாணிக்க மலையை*
*மதிப்பவர் தம் மனமணி விளக்கை*
*செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்*
*திருவீழிமிழலை வீற்றிருந்த*
*கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளங் குளிரவென்*
*கண்கள் குளிர்ந்தனவே:*

வி: நாம ரூபம் அற்ற ஒன்றே நான், நான் பலவாதற்கு விரும்பினேன். ஆகவே உருவங்களைக்கொள்ள வேண்டியதாயிற்று உருவங்களின்றி பலவாதல் இயலாது.

கே: நீ நித்தியம், ஆனால் உனது உருவங்கள் எப்படி அநித்தியமாகின்றன?

வி: அது அவ்வாறு தானிருக்கும். உண்மை ஒன்றானால் பல உண்மை அல்லனவாகும்: ஆகவே, உருவம் பிறக்கிறது, சொற்பகாலம் இருக்கிறது. அப்பால் மடிகிறது, பிறப்பு, மாற்றம், வளர்ச்சிஅழிவு, இவையேஉருவங்களின்இயல்பு.

கே: தாயே! உனது உருவங்கள் அழியும் போது நீ எப்படி இருக்கலாம்?

வி: குழந்தாய்! நகையை உருக்கும்போது அதன் உருவம் அழிந்து உள்ள பொன்உள்ளபடிஇருக்கிறது .பனிக்கட்டி சூடு பட்டதும் உருகி நீராகிறது அதுபோல நானும்அழிவதில்லை.

கே: நீ அனேகம் ஆவதற்கு விரும்பியதேன்?

வி: விளையாட விரும்பினேன், ஒன்றிற்கு மேற்பட்டவர் இல்லாமல்அதுசாத்தியமாகாது. ஆகவே அனேகமாகயானே காட்சி கொடுத்தேன்.

கே: இவ்விளையாட்டால் நீங்கள் அடையும் லாபமென்ன?

வி: ஆனந்தம்-பரமானந்தம்

கே: தாயே! உலகம் முழுவதும் துன்பம் நிறைந்ததாகத்தோற்றும் போது: தாங்கள் ஆனந்தத்தைப்பற்றிப் பேசுவதெப்படி?

வி: குழந்தாய்! யானே: இன்பம் துன்பம் கோபம் முதலியனவாக நடிக்கிறேன் என்பதை அறிந்துகொள்;

கே: நீ துன்பமாக நடித்துக்கொண்டு அதே சமயத்தில் அதனால் பாதிக்கப்படாமலிருப்பது எங்ஙனம்?

வி நடிப்பு எப்போதும் ஒரு தோற்றமே: அது நடிப்பவரைப் பாதிக்காது; நடிகர் ஒருவர் அழுவதுபோல நடிக்கிறார் ஆனால் அவரின் உள்ளம் மாறுவதில்லை. இதுபோலவே தான் மற்றும் அனுபவங்களிலும் உணர்ச்சிகளிலும்.

(தொடரும்)



## திருமுறைக்காட்சிகள் (4)

—[ முத்து ]—

# பால் நினைந்தூட்டுந் தாய்.

தாய் பொறுமை வடிவம்; தியாகத்தின் சின்னம். பூதேவி பொறுமைக்கரசி "அகழ்வாரைத்தாங்கும் நிலம்போல" என வள்ளுவரின் உவமைக்கு இலக்கியமாக அமைந்தவள். பூதேவியின் மடியிலிருந்தே தாய் உற்பத்தியானாள். பல விதத்திலும் தொந்தரவு கொடுக்கும் ஒருஜீவனை, ஒருதினமல்ல, இரண்டு தினமல்ல, பலநூறு தினங்கள் திருவயிற்றிலே வைத்துக்காக்க எவ்வளவோ பொறுமை எவ்வளவோ கருணை வேண்டும்.

இத்தகைய தாய்மார்களிலும் பலவிதமுடையாரைப் பாரினில் காண்கின்றோம். குழந்தைநித்திரை தெளிந்து அழுகின்றது. தாயைக்காணவில்லை. சமையலறை தேடிக்குழந்தை செல்லுகின்றது. தாய் அங்கே அடுப்பு நெருப்போடு போராடிக் கொண்டிருக்கிறாள். தாயைக்கண்டதும் குழந்தை வீறிட்டழுகின்றது. தாய்க்கு அடுப்பு நெருப்பின்மீது, காலையில் கணவன்மீது ஏற்பட்ட கோபங்கள் குழந்தைமீது திரும்புகின்றன. குழந்தையின் அழுகை தாய்க்கு கொழுந்துவிட்டெரிகின்ற நெருப்பில் நெய்வார்த்தாற்போல் அமைத்துவிடுகின்றது. குழந்தையை இழுத்து இரண்டுகுத்துக்கள் குத்தி அதன் பின் பாலூட்டுகிறாள் ஒரு தாய்.

உனக்கு எந்த நேரமும் பசியும் அழுகையும் தானா என்று வைது அதன்பின் பாலூட்டுகிறாள் இன்னொருதாய். குழந்தை நித்திரை தெளிந்ததும் அழுகைச்சத்தம் கேட்கிறது. குழந்தையின் அழுகை ஒலி தாயின் காதில் விழுந்ததும் செய்த கருமங்கள் எல்லாவற்றையும் அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்து என் கண்ணே எழும்பிவிட்டாயா? பசித்து விட்டதாடா? என்று கொஞ்சிக் குலாவிப்பாலூட்டுகிறாள் வேறொருதாய். மணி பன்னிரண்டு அடிக்கிறது. என் குழந்தைக்குப் பசிக்கப்போகிறதே என நித்திரையாகக்கிடக்கும் குழந்தையினருகிற் சென்று அவனுக்கு முத்தமிட்டு

மெல்லவாக அவனைத்தடவி நித்திரையிலிருந்து எழுப்பிப்பாலூட்டுகிறாள் பிறிதொருதாய். இப்படி நால்வகைத்தாய தாய்மாரைக்காண்கின்றோம் எமது வாழ்க்கையில்,

மகான்கள் எல்லோரும் இறைவனைத் தாயாகவே போற்றியிருக்கின்றார்கள்.

*'தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்'*
என்கின்றார் வள்ளலார்.

*'தாயினும் நல்ல தலைவரென் றடியார்*
*தம்மடி போற்றிசைப் பார்கள்.'*
என்கின்றார் திருஞானசம்பந்தப்பெருமான்.

*'எந்தாயுமெனக்கருள் தந்தையும் நீ'*
என்கின்றார் அருணகிரியார்.

தாயே நீ தீனபந்து. அடித்தது ஒரு கரமானால்; அணைத்தது உனது திருக்கரம் தாயே அணைத்த அந்தத்திருக்கரங்களிலேதான் இன்றளவும் நான் தலைசாய்ந்து ஆறுதல் பெறுகிறேன்
என்கின்றார் ஒரு பெரியார்.

"என்னருமைத்தாயே, உன் பாதாரவிந்தங்களில் உண்மையான பக்தியை எனக்கு அளி: நான் வேறெதுவும் வேண்டேன். என்னிடமுள்ளயாவற்றையும் எடுத்துக்கொண்டு, உன் பாதகமலங்களில் திடமான பக்தியை மட்டும் எனக்கருளுவாயாக!"
என்கின்றார் வேறொருபெரியார்.

"தாயே, ஆபத்து வந்தால் உன்னை நினைக்க ஆரம்பிக்கின்றேன். இதை என் துர்க்குணமாய்க் கொள்ளாதே. கருணைக்கடலின் நாயகியே பசிதாகக் கொடுமையினால் வருந்தினோர் தாயை நினைப்பது சகசமேயன்றோ!"
என்கின்றார் பிறிதொரு பெரியார்.

"கெட்டமகன் பிறக்கலாம் கொடியதாய் இல்லை அல்லவா?"
என்று திருவாய் மலர்கிறார் ஸ்ரீ சங்கரர்.

"அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே"
என்று துதிக்கிறார் ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள்,



"எப்பிறப்பில் காண்பேன் இனி"? என்று புலம்பிப்பெருமூச்செறிகின்றார்கள் பட்டினத்தடிகள்.

பிறந்தது தாய் வயிற்றில் வளர்ந்தது தாய்மடியில். மறைவதும் தாய்மார்பிலே தான். மகரிஷிதாயுமானவருக்கு உறையூர்ச்சோழன் பொன்னாடை போர்த்து மகிழ்கின்றான், அதைச்சுவாமிகள் மழைக்குளிரால் நடுங்கி ஒடுங்குகின்ற புலைச்சி ஒருத்திக்கு அளிக்கின்றார். அரசன் கோபித்துக் கேட்ட காலத்தில் சுவாமிகள் திருவாய்மலர்ந்ததென்ன?

புலைச்சிக்கு அளிக்கவில்லை. தாய் அகிலாண்டேஸ்வரிக்குச் சமர்ப்பித்தேன். உலகம் கண்டது புலைச்சி அவர் தரிசித்தது தாயின் திருஉருவம். "தாயை வணங்கு" என்று உபநிடதம் சொல்கிறது. 'தந்தை தாய்ப்பேண்" என்று நீதி நூல் மொழிகிறது.

மணிவாசகப்பெருந்தகை இறைவனோடு ஊடாடிக் குதூகலித்து அவர் அன்பை நேருக்குநேராக அநுபவித்தவர். "கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை" என்று தமது எளிமையைத்தெரிவித்தவர், இறைவனது அன்பிற்கு உவமை தேடினார். தாய்தான் அகப்பட்டாள். அதிலும் சிறந்த உவமையைத்தேடமுடியாதல்லவா? அதுவும் பால் நினைந்தூட்டும் தாய்தான் சிறப்புடையவள். குழந்தை தன் பசியைத்தான்உணராத காலத்தும் தாய் குழந்தையின் பசியைத் தன் பசியாக உணர்ந்து தீர்க்கின்றாள் அல்லவா? ஆதலால் பால் நினைந்தூட்டும் தாய் அன்பின் சிகரமாகிறாள். அத்தகையதாயினும் பரிவுடையவன் இறைவன். அடியார் தமக்குரிய குறைகளை உணர்ந்து வேண்டத்தொடங்கு முன்னமே அவற்றை அறிந்து நீக்கமுயல்வான் "வேண்டத்தக்கதை அறிவோனும் வேண்டமுழுதும்தருவோனும் இறைவனே யன்றோ? சில குழந்தைகள் விளையாட்டு விருப்பில் தம் பசியை மறத்தல்போல, அடியார்களிற் சிலர் தமது குறையை நன்குணர்ந்து ஆற்றாது இரக்கவும் மறப்பர், வேறு விஷயங்களில் உள்ள ஈடுபாட்டால் அடியார்கள் மறக்கினும், இறைவன் அதனை மறவாது நினைந்து செய்யத்தக்கதைச் செய்வான். உலகத்தாய் குழந்தையின் உடல் கொள்ளும் அளவறிந்து ஊட்டுகின்றாள். இறைவன் மெய்யடியார்களின் உயிர் நலத்தை உண்ணின்

றுநோக்கியறிந்து அவர்க்கு வேண்டியபோது வேண்டிய அளவிற்கு மறவாது ஞானப்பாலை ஊட்டுகின்றான். இதையே மணிவாசகர் கருத்துட் கொண்டு

“பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து” என்று அருளினார். இன்னும் உலகத்தாய் அவ்வந்நேரத்தேதான் குழந்தையை நினைவுறுவாள் பிறநேரங்களில் அதை விடுத்துத்தன் வேலையில் முனைந்திருப்பாள். இறைவனோ அவ்வாறாகிய நினைப்புமறப்பின்றி ஒரே தன்மைத்தாய் அன்பினைப் பொழிந்தவாறிருப்பன்.

உலகத்தாய் தன் மகன் உத்தமன் என உலகோரால் போற்றப்படும் போது ஈன்றபொழுதிலும் பெரிதுவக்கின்றாள். அதேபோல் அவனை ஒரு பாவியென்னும்போது “என்னையும் இப்பாவி பெறநேர்ந்ததே” என்று மனம் வெதும்பிப்புலம்புகின்றாள். ஆனால் இறைவனோ எமது பொல்லாவினையையும், தன்னை நினைந்து “கசிந்துள்ளுருகும் நலம்” சற்றும் இல்லாத தன்மையையும், ‘விலங்கு மனத்தை’யும் நன்கறிந்திருந்தும் குற்றங்களையே குணமாகக்கொண்டு அருள் புரியும் மேன்மையான தயையுடையனாயினன். இதை நினைந்து ‘நீ பாவியேனுடைய’ என்றார்.

தாய் தனது பரிவால் ஒரு பாவமும் அறியாத குழந்தைக்குப் பால் ஊட்டுகிறாள், அந்தப்பால் ஊனைப்பெருக்கி, ஞானஒளியைக் குறைத்து அழியும் ஆனந்தத்தைத்தருகிறது. ஆனால் இறைவனோ என்னைப் பாவியேன் என்று அறிந்தும் தம் பரிவால் சிவானந்தப்பால் ஊட்டுகின்றான். அந்தப்பால் ஊனினை உருக்கி உள் ஒளியைப்பெருக்கி, அழிவற்ற ஆனந்தம் சொரிகின்றது, தாய்மார் ஊட்டும்பால் சேய்க்கு உணவாவதன்றி ஞானப்பாலைப்போல வெறிபளிக்கும் தேனாகாது, தாய் பாலைக்குழந்தைக்குச் சிறிது சிறிதாக ஊட்டுவாள் இறைவனாகிய தாயோ தனது ஞானப்பாலைச் சொரிவாள். அதிலே ஞானச்சேய்மூழ்கினும் அதனால் அச்சேய்க்கு ஆபத்து இல்லை. ஞானப்பாலில் மூழ்கிவிடுவோனும் இறக்காது பிறப்பிறப்பற்ற பேரின்ப வாழ்வையே அடைவான். குழந்தையின் வாய் பட்டாலன்றித் தாய் பால் சுரக்கமாட்டாள். ஆனால் இறைவனோ பிறரை எதிர்பாராது தனது அருளால் ஞானப்பாலைச் சொரிவான், இதனையே சுவாமிகள்



*“ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து”*

என்று அருளிச் சென்றார்.

தான் செல்லும் இடந்தோறும் தாய் தன் குழந்தையை எடுத்துத்திரிவாள். இறைவனோ தமது அடியார் பின்னேதான் திரிபவன் சுத்தரர்க்காகப் பரவையிடம் தூது நடந்தவனல்லவா? அடியார் நடுவுள் இருக்கும் அன்பனல்லவா? அடியார் நினைத்ததை அவர் பின்னே சென்று நிறைவேற்றி வைப்பவன். குழந்தை முதன்முதல் எழுந்து நின்று தளர் நடைகற்கும்போது தாய் குழந்தை அறியாமலே தன்னிரு கைகளையும் பின்னே கொண்டு சென்று தாங்குகின்றாள் அவ்வண்ணமே இறைவனும் “புறம்புறம் திரிந்து” அடியார்க்கருள் புரிகின்றான்.

“ஊணே உடையே, பொருளே என்று உருகி மனது தடுமாறி வீணே துயரத்தழுந்துகின்றேன்” என்று வள்ளலார் வாய்விட்டுரைக்கின்றார். மணிவாசகப்பெருந்தகையும் வெகு காலம் உண்மைப்பொருள் எதுவென்று தெரியாது மயங்கியவர். தம்மைப்புறம்புறம் நாடித்திரிந்த செல்வம் இறைவன் என்பதை உணர்ந்தார். அவன் பரிந்தூட்டிய ஞானப்பாலால் அவனைத் தம் உயிரினும்இனிய மதிப்பரிய அழிவற்ற பெருஞ் செல்வமெனக் கண்டநாள் வந்தடைந்தது. ஆதலால் “செல்வமே சிவபெருமானே” என்று வாய்விட்டுரைக்கலானார்.

அடிகளார் இறைவனை உணராதிருந்த நாளெல்லாம் இறைவன் அடிகளார்பின்னே திரிந்தான். சிந்தை தனைத்தெளிவித்துச் சிவமாய தன்மையை அடிகளாருக்கு இறைவன் அளித்த உடனே அடிகளாரே இறைவன் பின்னே திரியத்தொடங்கி விட்டார். இறைவன் அடிகளைத் தொடர்ந்து, அடிகள் திரிந்த இடமெல்லாம் அன்பால் பின் சென்ற நாளெல்லாம் ஒழிய. அடிகள் இறைவனைப்பின் தொடரும் நாள் வந்தது. முன்பு இறைவன் அடிகளாரைத் தமது வலைக்குட்படுத்த முயன்றபோதெல்லாம் அடிகளார் அவ்வலைக்குள் அகப்படாது தப்பியதுமுண்டு. ஆனால், அடிகளாரோ இப்போ இறைவனை அறிந்தார்: இறுகப்பிடித்துக் கொண்டார். உன் அருளால் உனை உணர்ந்ததும் யான் உனைத்தொடரலானேன். சிக்கெனப்பிடித்தேன். முன்பு ஒரு முறை நீ எனக்குக் காட்டியருளிய

போது உன்னைப்பிடித்தேனாயினும் நழுவவிட்டேன். இப்போது உன்னை நழுவவிடாது உறுதியாகப் பற்றிக்கொண்டேன், உறுதியாகப்பற்றியபின். உனக்கு உவந்த இடமாகிய என் மனத்தே நிலையாக அமர்ந்தருளல் வேண்டும் என்கின்றார். இறைவன் நினைப்பவர்மனம் கோயிலாகக் கொண்டவன் அல்லவா? இறைவனைப்பிடிப்பதிலுள்ள அருமையை உணர்ந்த அடிகள் இனி இறைவனை எழுந்தருளவிடுவாரோ? ஆதலின் இறைவன் மனமகிழ்ந்து அடிகளது மனதிடனித்து அமர்ந்தருளுவதே முறை.

தாய் விளையாட்டாக ஒளிந்து நிற்கும்போது குழந்தை அவள் இருப்பிடத்தை அறிந்து "அம்மா! கண்டேன்! கண்டேன்! விடமாட்டேன்! என்று அவள் உடையை இறுகப்பற்றிக்கொண்டுஒன்றி நிற்குமாறு போல சுவாமிகளும் பிரிந்த இறைவனைப்பற்றிப் பிடித்துக்கொண்டு

"யான் உனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே"

என்கின்றார். பால்நினைந்தூட்டும் தாயினும்சாலப்பரிவுடைய இறைவன் தன்னைப்பிடித்த வகையையும் தான் இறைவனைப்பிடித்தவகையையும் மணிவாசகர் இத்திருவாசகத்திலே காட்டுகின்றார். இப்போ படியுங்கள்.

"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே."



# ஹிந்து ராஷ்ட்ர பக்தி

—(ஸ்ரீ குருஜீ)—

## விளக்க முடியுமா?

மக்களில் அநேகமாக எல்லோரும் தாங்கள் இந்துக்கள் என்பதை மறக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்துத்வம் என்றால் என்ன என்பதை விளக்குங்கள் என்று சிலர் முன்வந்து கேட்கிறார்கள். எல்லாவற்றிக்கும் விளக்கம் கொடுத்துக் கொண்டா நாம் இருக்கின்றோம்? யாதொரு விளக்கமும் இல்லாமல் இயல்பாகவே சிற்சில விஷயங்களை நாம் ஒப்புக்கொள்கிறோம், தற்காலத்திய மறதியின் பயனாய் மக்கள் இந்து என்றால் என்ன என்பதாக வினவுகிறார்கள். சங்கத்தில் இல்லாத நம்முடைய நண்பர்கள் பலர் அதற்கு விளக்கம் கொடுக்க முயற்சிக்கின்றனர். ஆங்கிலேயர்கள் சிற்சில சமயம் 'முசல்மான் அல்லாதவன் இந்து' என விளக்கம் கொடுக்க முயற்சித்தனர். அம்மாதிரியே நம்மக்களில் பலரும் இதுஇந்துஅல்ல, ஏனையவைகளே இந்து எனக்கூற ஆரம்பித்தனர். பரம்பொருளை இம்மாதிரியே விவரித்து விளக்கம் கொடுக்கத் தேவைப்படுகிறது. இவ்வுலகத்தில் பரம்பொருள் எது என்பதாக நாம் கேட்போமெனக் கொள்வோம். அது கடவுள் எனச்சிலர் கூறுகிறார்கள். கடவுள் என்பதாகவோ பிரம்மா என்றோ வேறு எவ்வாறு நீங்கள் அழைத்தாலும் நான் அதைப் பொருட்படுத்த வில்லை. ஆனால் ஒரு பலவீனமான மனிதன் அப்பரம்பொருளை எவ்வாறு சித்திரிக்கிறான். சிற்சில சமயம் ஒருசிறிது அதிக சக்தி வாய்ந்தது போலும், தனக்குக் கட்டுப்பட்டது போலும். சிற்சிலசமயம் தயை, அன்பு இது போன்ற நற்குணங்கள் படைத்தது போலும். சிற்சில சமயம்கோபம் முதலிய தீக்குணங்கள் உடையது போலும் உள்ள மற்றொரு மனிதனாகவே அவன் சித்திரிக்கிறான். இதுவே பரம்பொருளை நோக்கிடும் பாமர மனித நோக்காகும். நாம் கண்டிடும் இவ்வுலகமே பரம்பொருளாகின் அது எவ்வாறு மாறுகிறது என்பதாக இவ்வித கேள்விகள் அவர்கள் முன் கொணரப்பட்டபோது, நமது முன்னோர்கள் கேட்டார்கள். இது பரம்பொருளல்ல என்பதாகக் கூறினார்கள். அனைத்தைக் குறித்தும் இம்மாதிரியான கேள்விகளைக்கேட்க ஆரம்பித்தனர். திடம். திரவம், வெளி இவற்றில் எவை பரம்பொ

ருள் அல்லது இவையனைத்தும் பரம்பொருளா? இல்லை இல்லை. இம்மாதிரி அவர்கள் இதுவல்ல. அதுவல்ல. (நேதிநேதி) என்பதாகக் கூறிக்கொண்டே சென்றுர்கள். இவைகளையெல்லாம் விலக்கிவிட்டு மிகுதியாக அடித்தளத்தில் எது மிஞ்சுகிறதோ அதுவே பரம்பொருளாகக் கூறினுர்கள், சொற்கள் இப்பரம்பொருளுக்குப்பிறகே தோன்றினமையால் அதை அறிய முடியாததாகவும், அறியமாட்டாததாகவும், விவரிக்க முடியாததாகவும், விளக்கமுடியாததாகவும் உரைத்தனர். ஆகவே சொற்களுக்குப்போதிய திறனில்லை. எவ்வாறு ஒரு மகன்தன் தகப்பனின் ஜனனத்தைப் பார்த்ததில்லையோ அவ்வாறே சொற்களுக்குப் பரம்பொருளை விவரிப்பதற்கான ஆற்றலில்லை.

அம்மாதிரியேதான் இந்து மக்களைப் பொறுத்தும் பெயர் கொடுக்க அவசியமில்லாத போது நாம் வாழ்ந்திருந்தோம். நாம் நல்லோர்களாக வாழ்ந்தோம். பேரறிவு பெற்றவராக விளங்கினேம். இவ்வுலகங் குறித்தும், இயற்கை நியதிகள் குறித்தும், ஆன்ம விதிகள் பற்றியும் எல்லாவற்றையும் அறிந்தவர்களாக நாம் இருந்தோம் மாபெரும் கலாசாரத்தையும், அரும் பெரும் நாகரீகத்தையும் தோற்றுவித்தோம். தர்மமாம் பெரும் சமுதாய அமைப்பை உண்டாக்கினேம். மனித சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய அனைத்தையும் நாம் செய்தோம். ஏனைய மக்களினம் மிருக வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த காலையிலே, நாம் அன்றுட வாழ்க்கையிலே அனைத்தையும் கண்டோம். சில சமயம் ஏனையோரிடையே நம்மை அறிவதற்காக அறிவாற்றல் மிக்கவர்கள் என்பதாக நாம் அழைக்கப்பட்டோம். மற்றவர்கள் மிலேச்சர்கள் என்றும், இந்துக்களாகிய நாம் ஆரியர்கள் என்றும் கூறுவது வழக்கம். ஆரியன் என்ற வார்த்தையைக் கூறினவுடன் தற்காலத்திய விசித்திர எண்ணங்கள் உங்கள் நினைவிற்கு வரும்.

## ஆரியரும் திராவிடரும்

ஆரியர்கள் ஆர்க்டிக் வட்டாரத்தில் மத்தியாசியாவில் எங்கோ வசித்து வந்தவர்கள் என்றும் இந்நாட்டின் பூர்வீக குடிகளாக வேறுசிலர் வசித்து வந்ததாகவும் கூறும் சிலரை நீங்கள் கண்டிருக்கலாம். அப்பூர்வீகக்குடிகளே திராவிடர்கள் எனஅவர்கள் கூறுகின்றனர். நமது பண்டைய இலக்கியங்களை ஆராய்ந்திடமுயற்சித்



திருக்கின்றேன், நமது மொழிகளிலே தான் ஆரியர் என்னும்சொல் வழங்கப்படுகிறதால் நமது இலக்கியங்கள் தான் அதற்கான சரியான விளக்கத்தைக் கொடுக்கமுடியும், உலகத்தில் ஏனைய மொழிகளில் இது இரவல் வாங்கப்பட்டுள்ளது. ஆகவே இது நமது சொல்லாதலால் அதன் அர்த்தத்தையும் சொல் அமைப்பையும் நமது இலக்கியத்திலிருந்தே அறியமுயல வேண்டும். முதல் தடவையாக அது உபயோகிக்கப்பட்டுளது குணசித்திர விளக்கமாகவே அன்றி ஒரு இனத்தை விவரிக்க அல்ல. மனித குணங்களை விவரிக்கவும் மரியாதைச்சொல்லாகவுமே அது குறிக்கப்பட்டது. நீங்கள் இராமாயணத்தைப்படித்தால் இராவணனின் இளைய சகோதரன் 'ஆர்ய' மரியாதைக்குரியவனே என்பதாக இராவணனை அழைத்துள்ளான்.இம் மாதிரித்தான் அச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது, ஆகவே எல்லாவற்றையும் நாம் நன்கு புரிந்து கொள்வோம்.

## நாம் இந்துக்கள்

மேலை நாடுகளின் வக்கிர புத்தியாலான இந்தத்தற்காலத்திய இன விளக்கம் நம் மக்களையும் வக்கிர புத்தி உடையோராக ஆக்கிற்று. இந்நாட்டிலுள்ள நம் மக்களை ஏனையோரிடமிருந்து பிரித்தறியவே ஆரியர் என்னும் சொல்லை உபயோகித்தனர். தன் சமுதாயத்திலே நால்வகை சிறப்புப்பிரிவு ஆசிற சமுதாயஅமைப்பையும், தர்மத்தையும் தோற்று விக்காதவரை மிலேச்சர் எனக்கூறினர்.அது ஒன்றுதான் பாகுபாடாயிருந்தது. வேறு எம்முறையிலும் இந்தச் சமுதாயம் பெயரிடப்படவில்லை. இங்குமங்குமாக உலகின் பல்வேறு பாகங்களில் வேற்று சித்தாந்தங்கள் தோன்றி சில ஆத்மார்த்த ஒழுக்க விதிகளை எடுத்துரைத்தபோது பெயரிடுவதற்கான அவசியம் தோன்றிற்று. பற்பல பெயர்கள் அளிக்கப்பட்டன. கடைசியாகச் சிந்துநதியிலிருந்து பெறப்பட்ட பெயரான இந்து என்பது பிரபலமாயிற்று. வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே குமரிவரையிலுள்ள மக்கள் எல்லாம் இந்துக்கள்என அறியப்பட்டனர்.இதுவே நமது பொதுவான, பிரபலமான பெயராக நமக்கு விளங்கியது. எவ்வாறு அப்பெயரை இப்போது விளக்குவது? நாம் இங்கு உள்ளோம் ஆகவே அதை விளக்குவதில்லை. விளக்கம் ஏதாவது தரப்படவேண்டுமானல் சிந்து முதல் சமுத்திரம் வரை இடைப்பட்ட பகுதியிலே

வாழும் மக்கள் என்று மாத்திரம் தான் கூறவேண்டும். இந்நாடு புண்ணிய பூமி என்றும், எவரெவர் இதைப்புண்ணிய பூமியாகவும் தாய் நாடாகவுங் கருதுகின்றனரோ அவரெல்லாம் இந்துக்களாகக் கருதப்படவேண்டுமென்றும் விளக்கம்சிலர் தந்தனர். ஆனால் அது பூர்த்தியுறாத விளக்கம். வேதத்தில் நம்பிக்கையுள்ளவர்களே இந்துக்கள் என வேறு சிலர் விளக்கம் தந்தனர். இதுவும் பூர்த்தியுறாத விளக்கமே. ஏனெனில் சாரவாகப்பிரிவினர் வேதத்தில் நம்பிக்கையற்றவர்களாயிருப்பினும் இந்துக்களே ஆவார்கள். இவ்விளக்கங்கள் எல்லாம் பூர்த்தியுறாதவை. இவை முழு உண்மையையும் வெளிப்படுத்துகிறதில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து கொண்டு, வியாபித்துக் கொண்டு, மிளிர்ந்து கொண்டு வரும் ஒருசார்மக்களுக்குத் தங்களது தோற்றுவாய் தெரியாதது இயற்கையே. நாகரீக வாழ்க்கை நடாத்திக்கொண்டு, எப்போது முதல் நாம் இங்கு வாழ்கிறோம் என்பது சரித்திர வல்லுனர்களுக்கும் புதிராக உள்ளது. ஓரளவிற்கு நாம் தொடக்க மற்றவர்களே. இத்தகைய மக்களுக்கு விளக்கம் தருவது இயலாததாகும். நாமாக உணர்ந்து அனுபவிக்க வேண்டியதொன்றாகும் இது. ஆகவே தான் இவ்விஷயங்களுக்கெல்லாம், விளக்கம் தர முற்படுவது கிடையாது.

## விதண்டாவாதங்கள்

“இந்து என்றால் யார் என்பதாக எண்ணுகிறீர்கள்” என்று ஒரு கனவான் நமது பூஜனீய டாக்டர்ஜியிடம் ஒரு கேள்வி கேட்டது நினைவிற்கு வருகிறது. அறிஞரிடம் சென்று கேட்டுப்பாருங்கள் எனக்குத் தெரியாது என்பதாக அவர் கூறினார். நீங்கள் இந்து ராஷ்டரத்திற்காக வேலை செய்கிறீர்கள். முகம்மதியர்களை விரட்டிடுவோம் எனக்கூறுகிறீர்கள். நாளடைவிலே வெளியிலிருந்து வந்ததாகக்கருதப்படும் ஆரியர்களை யாது செய்வீர்கள்? என்பதாக வினவினார், அவர்கள் வெளியிலிருந்து வந்திருக்கும் பக்ஷத்தில் ஆரியர்களையும்விரட்டிடுவோம் எனப்பதில் அளித்தார். “பின் நீங்கள்யார்” என அவர் கேட்டார். ‘நான் ஒரு திராவிடன்’ எனப்பகர்ந்தார்.

நாம் பஞ்ச திராவிடர்கள். ஏனெனில் ஆரியர்கள் ‘பஞ்சகௌடர்கள் என்றும், பஞ்ச திராவிடர்களென்றும்’ பத்துப் பிரிவுகள்



உடையவர். நர்மதைக்குத் தெற்கே பஞ்சதிராவிடர்களும், அதற்கு வடக்கே பஞ்சகௌடர்களும், ஆகவே நாம் திராவிடர்கள். ஆனால் அதை ஒரு இனமாகக் கூப்பிடுவது, தவறாக அழைப்பதும், சொல் மாறிக் கூப்பிடுவதுமாகும். ஆகவேதான் அவர், அவர்களையும் விரட்டிடுவோம் எனக்கூறினார். அதாவது அநாவசிய சர்ச்சைகளுக்கு நாம் தயாராயில்லை என்பதைக்கூறவே அவர் விரும்பினார். இந்த அபத்தங்களை யெல்லாம் அவர் நம்பவில்லை. இதிலிருந்து நீங்கள் அடைவது யாதும் கிடையாது என்றும் கூறவிரும்பினார். இவைகளினால் யாதொரு பயனும் இல்லை. அது எல்லையற்ற மணலில் சிறிது நீரை வார்ப்பதற் கொப்பாகும். நீர் மணலிலே உறிஞ்சப் பட்டுவிடும். அதிலிருந்து ஒன்றும் திரும்பப்பெறமுடியாது. ஒருபயனையும் அளிப்பதில்லை அது. ‘வாதம்தவிர்’ என்று நாரதர் தனதுசூத்திரத்தில் கூறியுள்ளார் ஆகவே இம்மாதிரியான அர்த்தமற்ற பிரயோசனமற்ற விவாதங்களில் ஏன் ஈடுபட வேண்டும்? ஆகையால் தான் நாம் சர்ச்சை செய்வதில்லை. நாம் இந்துக்கள் என்பதாக உணர்கிறோம். நம் சக்தியால் இந்துக்களிடையே இவ்வுணர்ச்சியை ஊட்டிடுவோம்.

வாதங்களையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு இந்துமக்களிடையே ஒற்றுமை வளர்ப்பது என்ற இந்த எளிய கூற்றை புரிந்து கொள்ளக் கஷ்டப்படுகிற மக்களிடம் நாம் செல்லவேண்டும். இவ்வொற்றுமையை நடத்தையில் கொணர முயற்சிக்க வேண்டும். அன்றாட வாழ்க்கையிலே நாம் இதை உணர்ந்திடுவோம். இந்து என்ற இவ்வார்த்தையில் கஷ்டம் காண்கிறவர்களிடம் இது எங்களது உறுதிப்பாடு என்பதாக நாம் கூறுவோம். முதலில் நாம் அந்த உணர்வு கொள்வோம். அது நம்முள் இருக்கிறது. நமது ஒவ்வொருதுளி இரத்தத்திலும் உள்ளது. அதை நாம் வெளிப்படுத்திட வேண்டியதுதான், நம்மிடையே நுழைந்திருக்கும் வக்கிர உணர்ச்சிகளை ஒழித் துவிட்டு நாம் அதை வெளிப்படுத்தியுள்ளோம். நாம் இந்துக்கள் என உணர்கிறோம். அது குறித்து யாதொரு சந்தேகமும் இல்லை.



# ஸ்ரீ கதிரைமணி மாலை

—(பரமஹம்ஸ தாசன்)—

**காப்பு.**

செல்வக் குமரன் திருவடியைச் செந்தமிழால்
வல்வினையேன் போற்றி மகிழவே...செல்வக்
கதிரைவளர், ஞானக் களிறே! என் நாவில்
அதிர முழங்கி யருள்!

**நூல்.**

ஊனாய் உயிராய் உலகமெலாம்
ஒளிரும் கருணைப் பேரிறைவா!
கோனாய்த் தமிழர் குலங்காக்கும்
குமரா! பரம குருதேவா!
வானோர் பணியும் படைத்தலைவா!
வள்ளி படரும் மலைக்கிழவா!
தேனார் அமுதப் புனல்தவழும்
செல்வக் கதிரைச் செழுமணியே!

இலங்கை இந்தியப் பேருறவு
என்(று)? என்றறியா தறிஞர்குழு
கலங்க, அகாலந் தனில் தமிழர்
கனிந்த சமய கலைப்பண்பு
துலங்கக் கானில் எழுந்தருளி
ஜோதிக் காமக் கதிர்வடிவாய்
இலங்கும் கருணை எழிற்பரிதி!
எந்தாய், உன்தா ளிணைபோற்றி!

இறைஞ்சித் தொழுவார்க் கிரங்கிமன
விருளைக் கடிந்துள் ளொளி பெருக்க
வருஞ்சித் திரவேல் விழிச்சுடரே!
வளர்செந் தினைத்தேன் வள்ளிமகிழ்
குறிஞ்சிக் கிழவா! அசுர குணக்
குலத்தை யழித்துன் குரைகழலை
இறைஞ்சிப் பெருவாழ் வுறவருளாய்
எந்தாய், கதிரை இறையவனே!



அரும்பு விழிகள் புனல்சொரிய
அங்கம் புளகித் தன்பரெலாம்
"கரும்பே, தெவிட்டாக் கனியே! எம்
கண்ணே!" என்றுன் சந்நிதியில்
துரும்பா யுருக எனைமட்டும்
சோம்பிக் கிடக்கும் கருங்கல்லாய்
இரும்பாய் வைத்தல் முறையாமோ?
இதுவோ கருணை? எம்மானே!

அன்புள் ளுருகி யடியரெலாம்
அரோக ராவென் றார்ப்பரித்து
இன்பக் கடலில் திளைந்தாடும்
இயல்பைக் கண்டும் எளியமனம்
பெண்பால், பொருள்பால், காட்சியின்பால்
பெயர்த்தும் செல்லா தொழிந்திலவே!
என்பால் சற்றும் உனக்கிரக்கம்
இலையோ? கதிரை யெந்தாயே!

ஆண்பால், பெண்பால், ஜாதி, மதம்
அனைத்துங் கடந்து, மக்களெலாம்
தேன்போல் பேசி, ஒரு குலமாய்ச்
சேர்ந்து மகிழ்ந்திங் குனைவணங்கக்
காண்பார் எவர்தாம் கசிந்துருகார்?
கருணைக் கடலே! இதுபோல
ஏன்தான் எங்கும் ஒருமைமனம்
இலையோ? கதிரை யெழில் மணியே!

பாலர், விருத்தர், ஆண், பெண்கள்
பலரும் குவிந்த மனத்துடனே
ஓல மிட்டுக் கசிந்துருகி
உணர்ச்சி வேகத் துடன், உனது
சீலம் பொலியும் கதிரைமலை
செல்லும் காட்சி கிணையுண்டோ?
கோலச் சுடர்வேல் உருக்கொண்ட
குமரா! கதிரைக் கோமானே!

(தொடரும்)

# சுவாமி சிவானந்தர் வாக்கு

## புத்தரின் கதை.

தீமைக்கு அக்கணமே நன்மை செய்து, அதனால் தீமை செய்தவனுக்கு அவமானமாகிய தண்டனையைச் செய்துவிடு. புத்த பகவானால் அடிக்கடி பிரசாரம் செய்யப்பட்டதும் அப்பியாசம் செய்யப்பட்டதுமான கொள்கை இதுதான். "ஒரு மனிதன் எனக்குத்தீங்கிழைத்தால், அதற்குப் பதிலாக அவனுக்கு நான் நன்மையே செய்வேன். எனக்கு அவன் அதிகமாகத் தீங்கிழைத்தால், நான் அவனுக்கு அதிக நன்மையையே செய்வேன். நன்மையின் மணம் நன்மை செய்தவனையே அடைகிறது. தீமையிலிருந்து உண்டாகும் காற்றுத் தீமை செய்தவனிடமே போய்ச்சேருகிறது," என்று அவர் சொல்லுவது வழக்கமாம். இந்தக் கொள்கையைத் தானும் அநுஷ்டானம் செய்து பிறருக்கும்போதித்தார் என்னும்விஷயத்தைக்கேட்ட ஒரு முட்டாள் அவரிடம் வந்து அவரை ஒருநாள் முழுவதும் வாய்க்கு வந்தபடி வைதான். அதற்குப் புத்தர் ஒரு வார்த்தைகூடப்பேசாமல் புன்முறுவல் பூத்த வண்ணமாகவே இருந்தார். அவர் அம்மனிதனுக்காக இரக்கங்கொண்டார். அந்த மனிதன் வசைமாரிகளைப் பொழிந்து முடித்தவுடன், புத்தர் அவனைப்பார்த்து "அப்பா, குழந்தாய், ஒருவன் தனக்கு அளிக்கப்பட்ட வெகுமதியைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டால் அது யாரிடம் போகும்?" எனக்கேட்டார். அந்த முட்டாள் கேள்வியின் போக்கை அறிந்துகொள்ளச்சக்தியில்லாமல், "அப்படியானால் அது வெகுமதியை அளித்தவனுக்கே திரும்பிப்போகும்" என்று விடையளித்தான், அதற்குப் புத்தர் "குழந்தாய், நீ என்னை வைதிருக்கிறாய்; ஆனால் நான் உன்னுடைய வசையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். தயவுசெய்து அவற்றை உனக்கே வைத்துக்கொள். அவை உனக்கு துக்கத்துக்குக்காரணமாகவும் துக்கமாகவும் இராவோ? எதிரொலி சத்தத்துக்கு சொந்தமானது; நிழல் பொருளைச் சேர்ந்தது. அவ்விதம் போலக் கெட்ட நடத்தையுடையவனுக்குத் துக்கமே பயனாக இருக்கவேண்டும்", என்று சொன்னார்.

அம்மூடன் மறுமொழியே பேசவில்லை. மறுபடியும் புத்தர் "ஒரு புண்ணியாத்மாவைத் தூஷிக்கும் துஷ்ட சித்தமுள்ள ஒரு மனிதன்,



சுவர்க்கத்தைப்பார்த்து துப்புவதில் முயற்சியுள்ள ஒருவனுக்குச் சமமாக இருக்கிறான். அந்தஎச்சில்சுவர்க்கத்தை பாழ்படுத்தாது: ஆனால் அது அக்காரியம் செய்த மனிதனிடமே திரும்பி வந்து அவனையே அசுத்தப்படுத்தும். தூஷிப்பவன் புழுதியை இன்னொரு மனிதனிடம் வீசி எறியும் ஒருவனுக்குச் சமமாகிறான்; ஆனால் காற்று விரோதமாக இருந்தால் அப்புழுதியானது அதை எறிந்த மனிதனிடமே திரும்பி வருகிறது. அந்தப் புண்யாத்மாவுக்கு எவ்விதக் கெடுதலும் உண்டாவதில்லை. அவருக்கு மற்றவனால் செய்யப்பட்ட தீங்கானது, மறுபடியும் திரும்பித் தீங்கிழைத்தவனிடமே வந்து சேருகின்றது." என்றார்.

## நரகமும் சுவர்க்கமும் எங்கே?

நரகம் எங்கேயிருக்கிறது? நரகமானது காமம், வெறுப்பு, பொறாமை முதலிய தீய குணங்கள் குடிகொண்ட மனத்திலிருக்கிறது. சுவர்க்கம் எங்கேயிருக்கிறது? சுவர்க்கமானது அன்பு, சுத்தம், சந்துஷ்டி, பெருந்தன்மை முதலிய நற்குணங்கள் நிறைந்த மனத்திலிருக்கிறது.

## கடவுள்

காலரா என்னும் வியாதிக்குக் காரணம் கடவுள்தாம். அவ்வியாதியைக்குணப்படுத்தும் வைத்தியரும் அவரே. குற்றவாளிக்கு தூக்குத்தண்டனை விதிக்கும் நியாயாதிபதியும் அவரே. அவரே குற்றவாளியைத் தூக்கிலிடும் கொலையாளி. அவரே வேலைக்காரர்களைக் கட்டளையிடும் வீட்டுத்தலைவர், யஜமானனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வேலைக்காரனும் அவரே. மோட்டார் காரின் சொந்தக்காரரும் அவரே. அந்த மோட்டாரை ஓட்டும் ஸாரதியும் அவராகவே இருக்கிறார். கடிக்கும் பாம்பும் அவரே, குணப்படுத்தும் மாந்திரிகனும் அவரே. அவரே அரசர், அவரே குடிகள், வக்கீலும் அவரே, கட்சிக்காரரும் அவரே. அவரே தோட்டம், அவரே ரோஜா. எல்லாம் அவரைத்தவிர வேறில்லை. தங்கத்தாலான கடுக்கனும் வளையல்களும் தங்கத்தைத் தவிர வேறல்ல. நாமரூபத்தாலான இந்த உலகமானது கடவுளையன்றி வேறன்று. நீ இதை அடிக்கடி ஞாபகத்திற்கு கொண்டுவந்தால் உனக்கு ஒரு புதிய திருஷ்டி உண்டாகும், பற்றுதல் வெறுப்பு இவைகளிடமிருந்து நீ விடுபடுவாய். உனக்கு இந்தப் பூலோகமே சுவர்க்கமாகிவிடும். அவருடைய லீலைகளின் உட்பொ

ருளை நன்றாய் உணர்ந்து ஞானியாயிரு. ஒவ்வொரு உருவத்திலும் அவரைப் பூஜை செய்.

## மும்மைகள்

மூன்று பொருள்களை அருந்து. மூன்று பொருள்களை அணிந்து கொள். நீ பழக வேண்டியவை அஹிம்ஸை, ஸத்யம், ப்ரஹ்மச்சர்யம் என்ற மூன்றுந்தாம். மரணம்—ஸம்ஸாரத்தால் உண்டாகும் துக்கம் கடவுள் ஆகிய மூன்றும் எப்பொழுதும் உன் ஞாபகத்தில் இருக்க வேண்டியவை. அகங்காரம், ஆசை, அபிமானம் ஆகிய மூன்றையும் விட்டு விடவேண்டும். அடக்கம், பயமின்மை, அன்புஆகிய மூன்றையும் பழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும். இணைவிழைச்சு, கோபம், பேராசை அல்லது உலோபம் ஆகிய இந்த மூன்றையும் வேரோடு அழித்துவிட வேண்டும்.

அன்பர்களே! ஆத்ம ஞானத்தை விருத்தி செய்யக் கூடிய சில மும்மைகள் கீழே தரப்படுகின்றன. அவைகளை நீங்கள் தினந்தோறும்பழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும். மோக்ஷ இச்சை ஸாது ஸங்கம். சுயநலமற்ற பரோபகாரம் ஆகிய மூன்றிலும் அன்பு செலுத்துங்கள். லோபம், குரூர குணம், அற்ப புத்தி ஆகிய மூன்றையும் பழித்துத்தள்ளுங்கள். உதாரகுணம்,தைர்யம், பெருந்தன்மை ஆகிய மூன்றும் மெச்சத் தகுந்தவை. பெண்களிடம் மயக்கம், கோபம், கர்வம் ஆகிய இம்மூன்றும் வெறுத்தற் குரியவை. குரு, துறவு, நித்யாநித்யப் பொருள்களின் அறிவுஆகியவை வழிபடத் தகுந்தவை நாக்கு, கோபம், அலைமனம் ஆகிய மூன்றையும் அடக்கியாளவேண்டும். துஷ்டச்சேர்க்கை, அகாரியங்களில் ஆசை, கெட்ட எண்ணம் ஆகிய மூன்றையும் துறக்க வேண்டும். ஒழுங்கான உலக நடையில் அன்பு, மன்னித்தல், பொறுமை இவை மூன்றும் பழக்கத்துக்குக் கொண்டுவரத் தகுந்தவை. புறம் சொல்லல், பொய், கடுமையான வார்த்தைகள் இவை மூன்றும் விலக்கத் தகுந்தவை.

## பரம்பரா சாதனங்கள்

வேதாத்யயனம், பூஜை, மனத்தை ஒரு முகப்படுத்தல், தியானம், நன்னடத்தை, தவம், தர்மானுஷ்டானம், மனத்தை நல்வழிகளில் பழக்கல் முதலிய பரம்பரா ஸாதனங்கள்எல்லாம்சாசுவதமான சாந்தி, விடுதலை, அமரத்துவம் ஆகிய நிலைமைகளை அடைவதையே லக்ஷியமாகக் கொண்டவை.



ஒரு யோகி மன ஒருமையோடு மலைக்குகை யொன்றை நோக்கியோ ஒரு கோயிலுக்கோ அல்லது ஒரு தனி அறைக்கோ செல்லவேண்டும். மனத்தாலும்; பேச்சாலும் செயலாலும் ஒருவருடனும் கலத்தல் கூடாது. பொருள்களின் சேகரிப்போ கலப்போ யோகிகளுக்குத் துன்பங்களை விளைவிக்கும் எப்பொருளிலும் பற்றின்மையை வளர்த்தல் வேண்டும் உலகலர்பத்தில் மகிழ்வதும் நஷ்டத்தில் வருந்துவதும் கூடாது. தன்னைப் பிறர் வைதாலும்; வணங்கினாலும்; அவர்தம்மை ஒன்றாகப் பார்த்தல் வேண்டும். யாருக்கோ எங்கோ நன்மையோ தீமையோ ஏற்பட்டால் அவற்றைப் பற்றிச் சூழ்தல் கூடாது; ஊதியத்திலும் கேட்டிலும் மகிழ்வதும் வருந்துவதும் கூடாது; எல்லோரையும் சமமாகப் பார்ப்பதோடு காற்றினைப்போலப் பற்றற்று மிருத்தல் வேண்டும், இங்ஙனம் எந்தயோகி தன் மனத்தை இப்பண்புடன் போற்றித் தனக்கென வாழாது பிறர்க்கென உழைத்து எப்பொருளையும் எம்மக்களையும் தன் கண்ணுக்கு ஒன்றாக்கி ஆறு மாதங்கள் ஒழுங்கான நியமங்களோடு வாழ்கின்றானோ அவன் பிரஹ்மத்தை அறிவான், நிர்விகற்ப ஸமாதியும் அவனுக்குக்கைகூடும். [மகாபாரதம்—சாந்திபர்வம்;]

## சத்திக் களஞ்சியம் உன்னிடமே!

சக்திக் களஞ்சியம் உன்னிடமே. ஞானம் என்னும் கடலும் உன்னுள்ளே; ஆனந்தத்தின் ஊற்றும் உன்னிடம் தான்; எல்லாச் சக்திகளும் உன்னிடம் மறைந்து கிடக்கின்றன. உள்ளே இருப்பவன்தான் அழிவற்ற ஆத்மா; நீயும் பரமாத்மாவும் ஒன்றுதான். அதனைப் பெற்றுச் சுதந்திரமுள்ளவனாயிரு; தியானத்தால் உன்னிடம் மறைந்து கிடக்கும் சக்திகளை வெளிப்படுத்து: ஆதாரத்தில் மோது: ஆழத்தில் மூழ்கு: ஆத்மா என்னும் முத்தை வெளியிற் கொண்டுவா: தைரியமாயிரு: ஊக்கத்தைக் கைவிடாதே: நீ மகாத்மாவாக அல்லது பேரான்மாவாக ஆகிவிடலாம்.

## சாதனத்தில் நன்மையும் தீமையும்.

அழியா ஆத்மப் பொருளே!

ஆகாரத்தில் மிதமாயிருத்தல் நலம். ஆனால், இலைகளைச் சாப்பிட்டுக்கொண்டிருத்தல் கெடுதல். சரீரத்தை காப்பாற்றுதல் நலம் ஆனால், சரீர வாஞ்சையிருப்பது நலமன்று.

ஏகாந்த வாழ்வு இனிது, தாமஸ குணத்தோடிருத்தல் கெடுதல். வெளிப்படையான உள்ளம் நலத்தைக்கொடுக்கும்; ஆனால், மற்றவர்கள் குற்றங்களையும் ரகசிய விஷயங்களையும் வெளிப்படுத்தல்கேடு விளைக்கும்.

# நானும் எனது குருநாதரும்

(அ. இராமசாமி, ஜோகூர்பாரு, மலாயா.)

24-3-55 இரவு கனவிலே, சாது ஒருவர் தோன்றி ஓம் நாராயணாயநம, என்று எனக்கு உபதேசம் செய்தார். அந்த திருநாமத்தை பல தடவை சொல்லி மகிழ்ந்தேன். பிறகு விழித்துக் கொண்டேன்.

ஸ்ரீராம கிருஷ்ணபரம்பரையில் சிஷ்யர் ஒருவருக்கு தீட்சையளிக்கும் சமயம் தீட்சை செய்பவர் சிஷ்யரின் தலைமேலே தன் வலது திருக்கையை வைத்து; குழந்தாய்! உன் கனவிலே வந்து உபதேசித்த மந்திரத்தைக் கூறுவாயாக! என்பதையும் அவர் அந்த மந்திரத்தை வாய்விட்டு சொல்வதையும் புத்தகத்திலே படித்து நான் ஆச்சரியம் அடைந்திருக்கிறேன். இம்மாதிரியும் ஒரு சிஷ்யருக்கு இயலுமா? என்று சந்தேகித்திருந்தேன். இந்த சந்தேகமும் ஆச்சரியமும் என் குருநாதரின் திருவடி சக்தியினாலே இன்று தினம் அழிந்துபோயிற்று. தீவிர பக்தி நிறைந்த சிஷ்யன் ஒருவனுக்கு இம்மாதிரி சம்பவம், சர்வ சாதாரணம் தான் என்பதை தெரிந்து கொண்டேன்.

குருநாதரின் கடிதம் வெகுநாளாய் வராமல் இருந்ததாகத்தோன்றியது. அதை நினைத்து நினைத்து அதிக கவலையடைந்தேன், இரவு படுக்கைக்குச் செல்லும் முன் பக்கத்திலிருக்கும் பிள்ளையார் படத்தைநோக்கி, இன்னும் ஒரு வாரத்திற்குள் குருநாதர் கடிதம் வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். மறுநாள் 10 மணிக்கு குருநாதரிடமிருந்து, இரண்டு கடிதங்கள் வந்தன, நான் ஆனந்தம் அடைந்தேன்.

விடியற்காலம் நான்கு மணியிலிருந்து மணி 7-15 வரை நான் யாரிடமும் பேசுவதில்லை, பக்திக்குப்பணி செய்து கிடக்கும் நான், பிறரிடம் எவ்வாறு பேசமுடியும்?

என் குருநாதரின் திருவடி சக்தி வெளிப்படும்போது, அதற்கு எதுவும் தடையாக இருக்கமுடியாது. பூமிக்குள் அமுக்கி வைத்திருக்கும் பெரும் பாறையை, உடைத்துக்கொண்டு வெளிவருவது தான் என் குருநாதர் திருவடி சக்தியின் பெருமை. இதை, ஒருநாள் சம்பவம் கொண்டு விளக்குகிறேன்.



செல்லையா என்பவர் நெற்றி நிறைய விபூதி பூசி விநாயகர் படத்தை வணங்கி விட்டுத்திரும்பினார், வழக்கத்திற்கு மாறாக, காலை மணி 6க்கு, செல்லையா! இங்கே வாரும் பக்கத்திலே உட்காரும் என்றேன். ஒன்றுமே பேசாத அண்ணன் பேசுகிறாரே! என்று அவர் ஆச்சரியத்துடன் உட்கார்ந்தார். நீர் கூடிய சீக்கிரம் இந்தியாவிற்குப்புறப்படப்போகிறீர்! என்றேன். அதற்கவர், தாங்கள் ஊருக்குப்புறப்படுவதற்கு இன்னும் 6, 7 மாதங்கள் இருக்கிறதல்லவா? அப்போதுதான் நானும் கூடவருவேன், இதுதான் என் திடமான நம்பிக்கை. தாங்கள் சொல்வது எனக்கு பொருத்தமாகத் தெரியவில்லை, என்றார். அதுசரி நீர் இப்போது அப்படித்தான் சொல்வீர் நேரம் வந்ததும் நான் இப்போதே புறப்பட்டுப்போய் வர வேண்டும் என்று துடியாய்த்துடிப்பீர். சுமார்20 வயது பருவத்தின் சொரூபத்தைக் காண்பித்து விடுவீர் என்று சொன்னேன். அதுசரி, பார்ப்போம் என்று எழுந்து போய் விட்டார்.

அன்று தினம் காலை மணி 10 க்கு அவர் தாய் தந்தையரிடமிருந்து ஒரு விமானத்தபால் வந்தது. அதிலே எழுதியிருந்ததுவருமாறு—

உன் சித்தப்பார் உனக்காக வளர்த்து வைத்திருந்த பெண்ணை. அவர் நோக்கப்படி நீர் கல்யாணம் செய்து கொள்ள விரும்பாமல் நாள் கடத்துவதனால், அவர் நம் எதிரி பக்கம் சேர்ந்துகொண்டு அந்த மாப்பிள்ளைக்கே கல்யாணம் செய்து கொடுக்கப்போகிறார் கல்யாணத்திற்குத் தேதியும் குறிப்பிட்டாகி விட்டது. எல்லாரும் சேர்ந்து கொண்டு எங்களுக்கு எதிரி ஆகப்பார்க்கிறார்கள். உன் சித்தப்பார் செல்வாக்குபிக்கவர். அவருடைய எதிர்ப்புச் செயலால்எங்கள் வாழ்வே சிதைந்துவிடக்கூடும், ஆகவே ஷெ பெண்ணை கல்யாணம் செய்து கொள்கிறேன், என்று உன் சித்தப்பாருக்கு தந்தியடித்துவிட்டு உடனே புறப்பட்டுவா! என்று எழுதியிருந்தது.

இதைப் படித்ததும் காலையில் மலர்ந்த என் திருவாக்கு, பலிதமானதற்காக அவர் உள்ளம் உருகினார். அண்ணே! 4 மணி ஆனதும் வேஷ்டியை அவிழ்த்து வைத்துவிட்டு கோவணத்துடன் உட்கார்ந்து விடுகிறாரே! எள்று தான் தங்களை இகழ்ச்சியாய்நினைத்திருந்தேன். தாங்கள் சுவாமி கும்பிடும் பெருமையை இன்றுதான் கண்டேன். ஆனால் இந்த மாதிரியான ஆச்சரிய செயல்களை. நீங்கள் யாரிடமும் சொல்ல வேண்டாம். சொன்னால் பலிக்காது என்றார்.

கொஞ்ச நேரத்திலே கடிதத்தின் வாசகத்தை ஊன்றிப்படித்து சிந்தனை செய்யச் செய்ய அவன் உள்ளமே கலங்கி விட்டது. சமையல் வேலை பார்க்கும் அவர் உப்பை அள்ளி பாலிலே போட்டார் சர்க்கரையை அள்ளி குழம்பிலே போட்டார்; அவர் என்ன செய்கிறார் என்பது அவருக்கே புரியாது போயிற்று அவருடைய நினைவு இந்தியாவிலிருக்கும் தாய் தந்தையரின்மீது அடிமையாகி விட்டது. உடனே ஊருக்குப் போய் வரவேண்டும் என்றார்.

மேலதிகாரிகளுக்கு அவரை இந்தியாவுக்குப்போய் வரச்சொல்ல மனமில்லை. செல்லையா! கொஞ்சம் பொறு! போய் வரலாம்!என்றார்கள்; அதெல்லாம் முடியாது. நான் இப்போதே போய்வரவேண்டும் என்று துடியாய்த்துடித்தார். அவர் உள்ளம் கலங்கி விட்டதையறிந்து இவர் நமக்கு இனிமேல் பிரயோசனப்பட மாட்டார் என்று கருதி அவரை அனுப்பிவைப்பதற்கு சம்மதித்தார்கள். அவர் அதே கப்பலில் பிரயாணமானார்.

பரமாத்மா என் கனவிலே அறிவித்ததைத்தான் காலையிலே அவரிடம் சொன்னேன்இந்தச்செயல் உருவானதை நினைத்து நினைத்து. ஆனந்தம் பெற்று என சாதனையை மேலும் மேலும் தீவிரமாக்கிக்கொண்டு வந்தேன்.

என்குருநாதர் இது விஷயங்கள் பற்றி குறிப்பிடுகையில் சாதகன் ஒருவனுடைய வாழ்வில் இம்மாதிரி ஆச்சரிய சம்பவங்கள் நிகழ்ந்து அவனுக்கு ஆனந்தம் ஊட்டுவது அன்னையின் கருணைக்கும் அவன் அவனுடைய பக்தியை உயரத்தூக்கி விடுவதற்கும் அறிகுறி என்றார்

31–3–55 இரவு கனவில்; பயந்து அலறப் போகும் சந்தர்ப்பத்திலிருந்துஎன் குருநாதரின் திருநாமம் சொல்லி தப்பித்துக் கொண்டேன். இன்று தினம் என் குருநாதரின் திருநாமத்தை கனவிலும் சொல்லி, பயத்தைப்போக்கிக் கொள்ளும் வகை தெரிந்ததற்காக மகிழ்ச்சியடைந்தேன்.

குருநாதரின் மகா சக்தி வாய்ந்த திருநாமம் சிஷ்யன் கையிலிருக்கும் ஆயுதந்தான். அவன் அதன் வலிமையைக்கொண்டு பயத்தை விரட்டி ஜெயம் அடைந்து விடுகிறான். அவன் சிற்சில வேளைகளில் "என்இருதயத்திலும் நாவிலும் என் குருநாதரின் திருநாமம் உண்டு" எனக்கு எதிரி இவ்வுலகில் யாரும் இல்லை, என்று பெருமை பேசிக்கொள்கிறான். அவனுடைய பெருமை யெல்லாம்குருநாதர் அவனுக்கு அருள் சுரந்து கொடுத்ததுதான்.



# செய்தித்திரட்டு

## கண்டி தெய்வீக வாழ்க்கைச்சங்கம்

ஷ சங்கம் கண்டியைச் சேர்ந்த தென்னக்கும்பரபிள்ளையார் கோவில் மடத்தில் 29–10–55 சனிக்கிழமை ரிஷிகேசம் சுவாமிசிவானந்த சரஸ்வதி அவர்களுடைய சீடர் யோகி சச்சிதானந்தசரஸ்வதி அவர்களுடைய தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது அத்தருணம் பல பெருமக்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.மலைநாட்டுத்தமிழ்மக்களுக்கு இச்சங்கம் சிறந்த பணியாற்றும் என நம்புகின்றோம்.

## மறியற்சாலையில் முருகன் கோயில் உதயம்

குண்டசாலை சீர்திருத்த மறியற்சாலையில் கண்டி பசிரங்கவேலைப்பகுதி திரு. த. செல்வத்துரை அவர்களுடைய பொருளுதவிகொண்டு ஓர் சுப்பிரமணிய சுவாமிகோயில் கட்டப்பட்டு 30–10–55 ஞாயிற்றுக்கிழமை பல மந்திரிகள் சமுகத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. எவ்விடத்தும் முருகன் சந்நிதானத்தில் சிங்கள தமிழ்மக்கள் மிக ஒற்றுமையுடன் வாழ்கின்றார்கள் என கௌரவ மந்திரி நுகவெல அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## ஏழாலை இந்து வாலிப சங்கம்

30–10–55 ஞாயிற்றுக்கிழமை குராவத்தை அம்மன் கோயில் மண்டபத்தில் ஷ. சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுச் சமய வளர்ச்சிக்கான பல திட்டங்கள் ஆராயப்பட்டதோடு அவற்றைக் கொண்டு நடத்துதற்கான உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றதென அறிகின்றோம்.

## கிளிநொச்சி திருநெறிக்கழகம்

ஷ கழகச்சார்பில் சமய அபிவிருத்திக்கான கீழ்க்கண்ட செயல்கள் நடைபெற்றன என்பதறிந்து மிக மகிழ்கின்றோம்.

20–10–55இல் 25 பிள்ளைகள் சமய தீட்சை பெற்றனர்.

3-11-55இல் 35 பிள்ளைகள் சமய தீட்சை பெற்றனர்.

13-11-55இல் பழையகொலனி சித்திவிநாயகர் ஆலயத்தில் அகண்ட நாமபஜனையும் தீபாவளி பற்றிய சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

15-11-55இல் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் கந்த சஷ்டி விரதம் ஆரம்பிக்கப்பெற்று 21-11-55 முடிய ஏழுநாட்களும் கந்த புராணபடனமும் ஸ்ரீமத் க. வடிவேல் சுவாமிகளால் கந்தசஷ்டிபற்றிய உபந்நியாசமும் நடைபெற்றன.

### ஸ்ரீவாலை சரஸ்வதி பீடஸ் தாபனம்

காரைநகர் ஸ்ரீவாலை சரஸ்வதி அம்பாள்பீட ஸ்தாபனம் கடந்த நவராத்திரி தினத்தின்போது வெகு சிறப்பாக நடைபெற்றது.

### கோ. வை. சின்ன ஆறுமுக சுவாமிகள் அறுபதாம் ஆண்டுவிழா

ஷெ விழா 23-10-55 ஞாயிற்றுக்கிழமை சுவாமிகளுடைய சீடர் எல்லாம் கூடிக்கொண்டாடியதோடு சுவாமிகளுடைய நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டுள்ளார்கள்.

### தமிழ் மறைக் கழகம்

பல பரிசில்கள் வழங்கப்படும்,

அகில இலங்கைத் திருக்குறள் மனனப் போட்டியின் முடிவு திகதி 1-12-55 ஆகும்.

போட்டிகளில் முதல் மூன்றிடங்களையும் பெறுபவர்களுக்குப் பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்படும், இவற்றைவிடப்பின்வரும் பரிசில்களையும் வழங்குதற்குத் தமிழ் மறைக்கழகம் முடிவு செய்துளது.

1 ஒவ்வொரு பிரிவிலும் முதலாவதாகத்தேறும்பெண்களுக்கு 50 ரூபா பெறுமதியான தங்கப்பதக்கம்.

2 கீழ்ப்பிரிவுப்போட்டியில் பங்கு பற்றுபவர்களுள் மிகக் குறைந்த வயதுடையவருக்கு ஒரு பரிசில்.

3 தேர்வு நடத்தப்படும் ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு பிரிவிலும் முதலாவதாகத் தேறுபவருக்கு ஒரு பரிசில்,

4 ஒவ்வொரு பிரிவிலும் மிகக்கூடிய தொகையான மாணவர்களைப் போட்டியிற் பங்குபற்றச் செய்யும் பாடசாலைக்குதலைநபரிசில்.



5 ஒவ்வொரு பிரிவிலும் 75 சத வீதத்திற்கு மேற் புள்ளிபெறுபவர்களில் முதற் பதின்மருக்குப் புத்தகப் பரிசில்கள்.

**விளம்பரங்களுக்கு**

**தமிழ்மறைக்கழகம்**

18|2 அத்திடிபா வீதி. இரத்மலானை.

எனும் முகவரிக்கு எழுதுக.

### திரு. க: இராமச்சந்திரன் சஷ்டியப்த பூர்த்தி

ஆத்மஜோதியின் கௌரவ ஆசிரியரும் ஆத்மீகத்துறையில் அரும்பணி புரிபவருமாகிய **திரு. க. இராமச்சந்திரன்** அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி 1-11-55 ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயிலில் கொண்டாடப்பட்டது. சண்முக அர்ச்சனையின் பின் நடைபெற்ற கூட்டத்திற்கு கௌரவ **சேர். க. வைத்தியநாதன்** அவர்கள்தலைமை தாங்கினார்கள். சுவாமி இராமதாஸ், சிவானந்தா, சுவாமி சுத்தானந்தர் முதலிய மஹான்களிடமும் வேறு பல பெரியோர்களிடமும் இருந்து வந்த ஆசிச்செய்திகள் படிக்கப்பட்டன. கொழும்பு மக்கள் சார்பிலும், மலைநாட்டு மக்கள் சார்பிலும் மட்டக்களப்புமக்கள் சார்பிலும் வாழ்த்துப்பாக்கள் பாடி வழங்கப்பட்டன. சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் சுவாமிவரானந்த, திருவாளர்கள் ஆர். என். சிவப்பிரகாசம். ரா. ம. வள்ளியப்பச்செட்டியார். பு. கணபதி. சி. சரவணமுத்து. வே. அ. கந்தையா முதலாயினோர் திரு. க. இராமச்சந்திரனின் சேவைகளைப்பாராட்டினர். திரு. க. இராமச்சந்திரன் எல்லோருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்கள்.



## ஆனந்தாசிரமச் செய்திகள்

### வெள்ளி விழா

அன்னே கிருஷ்ணபாய் அவர்கள் 25 வருஷங்கட்கு முன்னர் துறவுபூண்ட புண்ணிய தினமாகிய கார்த்திகை மாதப் பூரணே 29-11-55ல் ஆகும். முன் அறிவித்தபடி இவ்வெள்ளிவிழாக்கொண்டாட்டத்துக்கு அன்னேயின் பக்தர்கள் விசேஷ ஒழுங்குகள் செய்துள்ளனர். அன்றைய நிகழ்ச்சிகள் பின்வருமாது:—

| | | |
|---|---|---|
| காலே | 4 30—5 00 | தியானம் |
| | 5 00—5 30 | வேதபாராயணம் |
| | 5 30—6 00 | பஜனே |
| | 6 00—7 00 | பாகவத சப்தகம் |
| | 7 00—8 00 | பஜனே |
| | 8 00—9 00 | பக்திப்பாடல்கள் |
| | 9 00—10 30 | பஜ்னே. ஆரத்தி |
| | 10 30—10 40 | பகவத்கீதை பாராயணம் |
| | 10 40—11 00 | சொற்பொழிவு |
| | 11 00—11 20 | அன்னேயின் பேரில் சுவாமி இயற்றியருளிய ஆங்கிலப் பாடல் படித்தல் |
| | 11 20—12 00 | வெள்ளி விழாமலரும் நாம லிகிதக் கொப்பிகளும் அன்னேக்கு வழங்கல் |
| | இடைவேளே—12-00—2-00 வரை | |
| மாலே | 2 00 3 00 | பஜனே |
| | 3 00—4 00 | பக்திப்பாடல்கள் |
| | 4 00—4 45 | நாம சங்கீர்த்தனம் |
| | 4 45—5 45 | பஜனே – ஆரத்தி |
| | 5 45—6 00 | வேத பாராயணம் |
| | 6 00—9 00 | பக்திப்பாடல்கள் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் |
| | 9 00—11 00 | கதாப்பிரசங்கம் |
| | 11 00 – 1 00 | பஜனே - தீபப்பிரதட்சணம் |

ஏழைகட்கு அன்னதானமும் வழங்கப்படும். எல்லா அன்பர்களினதும் ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது.

### நாமலிகித ஜெப யாகம்

10-10-55 வரையில் ஆனந்தாசிரமத்துக்கு அனுப்பப்பட்ட கொபிகளின் படிக்கு 286, 229, 834 நாமங்கள் எழுதப்பட்டுள்ளன.



## ஐயம் தெளிதல்.

**வினு: [1]** சைவ சமயத்தில் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உண்டா? விஞ்ஞானரீதியில் இது பொருந்துமா?

**விடை:** சைவ சமயத்தில் பேய் பிசாசுகளின் நம்பிக்கைக்கு இடம் இல்லே, ஆனுல் முழுமரணமோ அல்லது மறுபிறப்போ, இறுதி எரிநிலேயோ எய்தாத உயிர்கள் உடல் இல்லாமல் சஞ்சரித்துக்கொண்டிருப்பதாக சாத்திரரீதியாகச் சொல்லப்பெறுகிறது. பல இடங்களில் அனுபவத்தில் ஒத்திருப்பதாகவும் பொது மக்கள் சொல்லுகின்றுர்கள். உயிர்கள் அப்படி உலவுதலே விஞ்ஞானம் இறந்தவருடன் பேசுதலால் ஓரளவு உறுதிப்படுத்தியுள்ளது.

**வினு: [2]** சில கோவில்களில் பூசகருக்கோ அன்றி கோவிலேச்சேர்ந்த வேறு ஒருவருக்கோ தீபாராதனே நடக்கும் நேரத்தில் உருஏறி ஆடுதல் வழக்கமாகஇருக்கிறது. அவர்களே தம் வாயால் காணிக்கையும்கேட்கின்றுர்கள். இவற்றைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

**விடை,** உணர்ச்சி வயப்பட்ட சந்தர்ப்பங்களில் இஃமாதிரி நிகழ்வது உண்டு. திருவருள் உணர்ச்சி மேவியபோதும் உலகில் உணர்வு குறையாமையினுல்தான் காணிக்கை கேட்கும் நிலே ஏற்படுகின்றது: இரு உணர்வுகளும் சம நிலேயில் இருப்பினும் இந்நிலே நிகழலாம். திருவருள் உணர்ச்சி மேற்பட்டு, உலகியல் உணர்ச்சி குறைந்தால் காணிக்கை கேட்கும் நிலே வருவதற்கு இடமில்லே. சில இடங்களில் போலியாகவோ அன்றி பழக்கத்தின் காரணமாகவோ நடிக்கப்படலாம்.

**வினு: [3]** சிலர் பெண்களேத்தாயாகவும் சக்தியாகவும் பாடியிருக்க ஒரு சிலர் பெண்களே இழித்துக்கூறியிருக்கிறுர்களே: இவற்றின்கருத்து என்ன?

**விடை:** பெண்களே இழித்துக்கூறுவது முற்றிலும் புறம்பானது சமணம் பௌத்தம் முதலிய சமயங்கள் தமிழ் நாட்டில் கால் பரவாமல் போனதற்கு பெண்களே இழிவு படுத்தும் மனப்பான்மையே முழு முதற்காரணம். சேக்கிழார் பெருமான் "மங்கையற்கரசி எங்கள் குல தெய்வம்" என்று. பெண்மை நலத்தையே பெரிய புராணத்தில் வாழ்த்தியருளுகின்றுர். மிகப்பிற்பட்ட காலத்தில் வேறு இன்பப்பண்பாட்டை ஒட்டித்தான் சிலர் இழிவுபடுத்தும் மனப்பாங்கு பெற்றுர்கள். அவை கொள்ளத்தக்கவையல்ல.

—குன்றக்குடி அடிகளார்

Regd. at the G. P. O, as News Paper, H, C 59-500

# Religious Digest.

An International Journal, devoted to the Teachings of Prophets, Sages and Saints of East and West.

For the present, it will appear once in two months. The first issue, for November—December. 1955, is expected to be out in a few days' time.

THE ANNUAL SUBSCRIPTION

| | |
|---|---|
| Island | Rs. 6-00 |
| Foreign | 9 sh. or 2 dollars |
| Malaya | 6 dollars |
| Single Copy | Re. 1-00 |

Subscriptions should be paid in advance.

*Please write to:*

**K. RAMACHANDRA,**
Managing Editor,
60, DEAL PLACE, COLOMBO—3.

## ஆத்மஜோதி சந்தா நேயர்களுக்கு

*அன்பர்களே!*

தெய்வத் திருவருளாலும் உங்கள் ஒத்துழைப்பாலும் உங்கள் ஜோதிக்கு ஏழாம் ஆண்டு பூர்த்தியாகி எட்டாம் ஆண்டு ஆரம்பபாகி உள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் நினைவூட்டுகின்றோம். ஏழாண்டுகாலமும் வருடத் தொடக்கத்திலேயே சந்தாவை அனுப்பிச் சோதிக்கு ஆதரவு காட்டியதுபோலவே இவ்வாண்டும் முதலாவது சுடர் கிடைத்த உடனேயே தங்கள் சந்தாவை அனுப்பிவைப்பீர்களென எதிர்பார்க்கின்றோம். சோதியின் வளர்ச்சிக்காக உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக. விலாசமாற்றம் செய்வோர் பழைய புதிய விலாசங்களையும் சந்தா இலக்கத்தையும் தெளிவாக எழுதி அனுப்பவேண்டுகின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, (சிலோன்)**

Hony. Editor, K. Ramachandra, 60, Deal Place, Colpetty
Printed & Publisned by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 17-11-55